1987 மார்ச் 5]

உதகையில் அருங்காட்சியகம்,

71—(* வினா எண் 9902) திரு. கே. உச்சி : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதகையில் நடப்பாண்டில் தொடங்கப்படவிருக்கும் அருங்காட்சியகத்தின் மதிப்பீடு எவ்வளவு?

(ஆ) அதன் பணிகள் எப்போது துவங்கும்?

(இ) அருங்காட்சியகம் எப்போது முதல் செயல்படத் துவங்கும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) உதகையில் அருங்காட்சியகம் ரூ. 2 இலட்சம் மதிப்பீட்டில் தொடங்கப்பட உள்ளது.

(ஆ&இ) 1986-87 ஆம் ஆண்டு இரண்டாம் பகுதித் திட்டத்தில் (PART II SCHEME) உதகை அருங்காட்சியகம் அமைப்பதற்கு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. தகுந்த கட்டிடம் கிடைத்தவுடன் அருங்காட்சியகம் செயல்படத் தொடங்கும்.

திரு. கே. உச்சி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்காலிகமாக ஒரு கட்டடத்தில் அதை ஆரம்பிக்கும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையை அரசு ஏற்கத் தயார்; காரணம், கட்டுவதற்குப் பல லட்ச ரூபாய்கள் செலவாகும். வாடகைக்கு இடம் பெற முயன்றால் செலவும் குறைவாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு இடம் கிடைக்க தக்கபடி உதவ வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அந்தக் கருத்தைத் தெரிவித்து அந்த அடிப்படையில் இடம் கிடைக்குமானால் உடனடியாகத் துவங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

குடிசை மாற்று வாரிய வீடுகள்.

72—(* வினா எண் 9324) திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1984-85-ல் குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்ட வீடுகளுள் எத்தனை குடியிருப்போருக்கு சொந்தமாக்கப்பட்டது?

(ஆ) இந்த ஆண்டும் இத்திட்டம் தொடருமா?

(இ) அதன் விபரம் என்ன?